ரிதிமாலியத்த பிரதேச சபை - 2022

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரிதிமாலியத்த பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ரிதிமாலியத்த பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் மொத்த உரிமைகள் மற்றும் பொறுப்புக்களை விஞ்சி மொத்த சொத்துக்கள் ரூபா 11,319,414 இனால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் மொத்த பெறுவனவுகள் ரூபா 14,000,000 மற்றும் ஆண்டில் மொத்த கொடுப்பனவுகள் ரூபா 14,730,009 பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2017 ஆம் ஆண்டில் பிரதேச சபையை வழுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 03 நிர்மாண வேலைகளின் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கடன்கொடுத்தோர் மீதியை சரிசெய்வதற்காக ரூபா 3,562,813 தொகை திரண்ட நிதிய கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை கூற்றின் திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 1,978,839 வரவு மீதியாக காண்பிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் போது சிட்டையிடப்பட்ட கடை வாடகை வருமானம் ரூபா 1,186,200 ஆன இருந்த போதிலும், ரூபா 1,133,212 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் ஊழியர் பிணை முதலீட்டு கணக்கில் ரூபா 46,005 ஆக இருந்த போதிலும், ஊழியர் பிணை வைப்பு கணக்கு ரூபா 1,500 தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 25 கணக்கு விடயங்களில் ரூபா 41,543,819 ஆன மீதி நிதி நிலைமைக் கூற்றில், பேரேட்டு கணக்கு உப பட்டோலைகள் பி.ச. 07 படிவத்தின் பிரகாரம் மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை. | சரியாக சீராக்கங்களை மேற்கொண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ூகூட்டுப்பெறுமதி ரூபா 2,949,000 ஆன இருப்பு மீதியை உறுதிப்படுத்துவதற்காக பௌதீக இருப்பினை முறையாக இனங்காணாமை மற்றும் பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்காமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | குறைபாடுகளை சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இருப்பு மெய்மெய்யாய்வை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 23 மற்றும் 24(1) அ, ஆ பிரிவுகள் | சபைக்குரிய வீதிகளின் நிரந்தர அடையாளம் மற்றும் எல்லைகளை குறிப்பிட்டு திட்டம் தயாரித்து அந்த வீதிகள் மற்றும் சிறு வீதிகளின் பெயர் பட்டியலொன்றை காண்பித்து கட்டளைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள முறையில் அறிவித்தலை பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதி வரைபடாக்கும் நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன், அதன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் சட்டத்தின் 2 ஆம் பந்தி | 19 உறுப்பினர்களுக்கு 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையும் வருடாந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று வழங்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும், வழங்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் விதி 218 | மீளாய்வாண்டிற்காக சகல காணிகள் மற்றும் கட்டிடங்களை பரீட்சித்து சபையொன்றின் மூலம் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | வருடாந்தம் சொத்துக்கள் மெய்மெய்யாய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஈ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | 05 வருடங்களுக்கு ஒரு தடவை வாடகை மதிப்பீடு செய்து உடன்படிக்கை செய்த பின் சபையின் வருமானத்தில் அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான 51 கடைகளில் அவ்வாறு மதிப்பீடொன்று அறவிடப்படாமல் 2015 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் வாடகை அறவிடப்படுகின்றது. | விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட போதிலும், மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,827,035 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,249,369 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரி | 1,842,000 | 1,397,323 | 909,532 | 487,791 | 2,599,700 | 2,260,776 | 1,238,400 | 1,022,376 |
| (ii) | வாடகை | 6,002,000 | 3,690,659 | 5,470,627 | - | 6,062,000 | 4,591,550 | 4,720,440 | - |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 902,500 | 902,500 | 820,500 | 82,000 | 850,600 | 850,600 | 674,550 | 176,050 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,160,000 | 3,955,814 | 4,881,854 | - | 6,986,100 | 4,441,648 | 7,939,479 | - |
| | மொத்தம் | 10,906,500 | 9,946,296 | 12,082,513 | 569,791 | 16,498,400 | 12,144,574 | 14,572,869 | 1,198,426 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டிற்குரிய வாடகைக்கு வழங்கப்பட்ட சபைக்குச் சொந்தமான 03 வாராந்த சந்தைகளில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை ரூபா 1,300,517 தொகை 2023 பெப்ரவரி 02 ஆம் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிணை வைப்பு பணத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

நோக்கங்களுக்கு புறம்பான செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபைகளின் இலக்குகளுக்கிடையே பிரதேசத்தில் உள்ள மக்களின் சௌகரியம், வசதிகள் மற்றும் நலன்புரி மற்றும் சகல வசதிகளையும் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது பொது நூலகத்திற்காக புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு வருடாந்த பாதீட்டில் ரூபா 200,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 700 ஆன புத்தகங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த செலவினம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 01 சதவீதத்திற்கும் குறைந்த அளவாகும். | நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையின் காரணமாக வருமானம் குறைவடைந்தமையால் செலவினங்களை செய்தல் வசதியீனமாக இருந்தது. | பொதுமக்களின் சுவநலன்கள் சேவைகளை விரிவுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபையின் நிதஹஸ் ஆயர்வேத மருந்தகத்தில் மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக சபை நிதியத்தில் இருந்து நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன், ஆயர்வேத நிலையத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 200,227 தொகையான மருந்துகளில் மாத்திரம் 1150 நோயாளர்களுக்காக சேவை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே மருந்தகத்திற்கு 14 வகையான மருந்துகள் பற்றாக்குறை இனங்காணப்பட்ட போதிலும், பற்றாக்குறை மருந்தை பெற்றுக்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆயர்வேத திணைக்களத்தின் மூலம் வருடாந்த பொருள் வழங்கப்படுவதுடன், அவை போதியளவில் இல்லாத சந்தர்ப்பங்களில் சபை நிதியத்தில் இருந்து கொள்வனவு செய்யப்படும். | -மேற்படி- |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது வீதி நிர்மாணிக்கும் 13 வேலைகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 481,487 முற்பணம் 2023 பெப்ரவரி 02 ஆம் திகதியில் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | ஆளுநரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | முற்பணத்தை விரைவாக தீர்த்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் போது மீளாய்வாண்டின் போதும் பதுளை மாவட்ட செயலகம் ரிதிமாளியத்த பிரதேச செயலகம் மற்றும் நாகதீப கலநல சேவைகள் நிலையம் என்ற அரசாங்க நிறுவனங்களில் இருந்து சபைக்கு கையளிக்கப்பட்ட பழுதுபார்க்கக் கூடிய நிலைமையின் காணப்பட்ட லொறி வண்டி, டக்டர் மற்றும் 03 மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை பழுதுபார்ப்பதற்காக அனுப்பாமல் சபை வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. | விரைவாக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உரிய வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் சனவரி 01 முதல் திசெம்பர் 28 வரை சபைக்குரிய பெக்கோ இயந்திரம் 280.6 இயந்திர மணித்தியாலம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அதன் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 1,562,151 செலவிடப்பட்டிருந்ததுடன், பெக்கோ இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதால் ரூபா 589,180 வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. சபை அதிகார பிரதேசத்தில் மக்ககளின் சுக நலன்களுக்காக சபைக்குச் சொந்தமான பெக்கோ இயந்திரம் பல்வேறு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை வாகனம் ஈடுபடுத்தல் தொடர்பான பதிவேடுகளில் காண்பிக்கப்பட்ட போதிலும், பெக்கோ இயந்திரம் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது செயற்பாடுகளுக்காக பெக்கோ இயந்திரத்தை ஈடுபடுத்துதல் அத்தியாவசியமாக இருந்ததுடன், அவ்வாறான கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மதிப்பீடு தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பெக்கோ இயந்திரத்தை பணிகளில் ஈடுபடுத்துவதற்கு மதிப்பீடு மற்றும் எழுத்துமூல சான்றுகள் வைக்கப்படல் வேண்டும். |

## 3.4 போதியளவான அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாரு காணப்பட்ட கிடைக்க வேண்டிய நீர்க் கட்டணம் ரூபா 4,509,616 மற்றும் கடை வாடகை வருமானம் ரூபா 71,519 தொகை என்பன முறையான அங்கீகாரம் இன்றி கணக்குகளில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |